## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி உதவித் தொகை – மாண்புமிகு அமைச்சர் (ஆதிந) அவர்களின் அறிவிப்பு – 2021 – 2022 ஆம் கல்வி ஆண்டு முதல் மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பராமரிப்புப்படியினை ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்குவதற்காக ரூ.8,79,00,000/- நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகின்றன

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-3)துறை

அரசாணை (நிலை) எண். 107 | நாள் 14.12.2021

பிலவ வருடம்,
கார்த்திகை 28 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.7, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-3) துறை, நாள் 12.01.2012.
2. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதம் ந.க.எண்.அய்1/20844/2021, நாள் 29.07.2021 மற்றும் 21.10.2021

-------------

### ஆணை

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2011-2012 ஆம் கல்வியாண்டு முதல் ஒன்றிய அரசின் கல்வி உதவித் தொகைப் பெற இயலாத கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்க்கு வழங்கப்படும் சிறப்பு படிப்பு உதவித் தொகையை விடுதியில் தங்காது கல்வி பயிலும் மாணவ / மாணவியருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.100/- முதல் ரூ.175/- வரையும், விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்க்கு மாதம் ஒன்றிற்கு ரூ.175/- முதல் ரூ-350/- வரையும் உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

2. மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் 2021-2022 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார் : -

*"ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் 2020-2021 ஆம் ஆண்டு முதல் பராமரிப்புப்படி உயர்த்தி வழங்கப்பட்டு வரும் விகிதத்திற்கு இணையாக மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூ.4.63 கோடி ஆகும். இத்திட்டத்தின் கீழ் 26024 மாணாக்கர்கள் பயனடைவர்"*

3. மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க, கீழ்கண்டவாறு கல்வி உதவித்தொகையை உயர்த்தி வழங்க ஆணை வெளியிடுமாறு அரசை ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

| போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்ட நெறிமுறைகளில் உள்ளப் பாடப்பிரிவு | மாநில அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் பாராமரிப்பு படி வருடத்திற்கு (முன்பு வழங்கப்பட்ட தொகை) | | ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டம் பாராமரிப்புப்படி வருடத்திற்கு (தற்போது கோரப்படும் தொகை) | |
|---|---|---|---|---|
| | Day scholar | Hosteller | Day scholar | Hosteller |
| Group 1 | 175x12 = 2100 | 350x12=4200 | 7000 | 13500 |
| Group 2 | 140x12=1680 | 225x12=2700 | 6500 | 9500 |
| Group 3 | 100x12=1200 | 175x12=2100 | 3000 | 6000 |
| Group 4 | 140x12=1680 | 225x12=2700 | 2500 | 4000 |
| Group 4 (Schools) | 100x12=1200 | 175x12=2100 | 2500 | 4000 |

4. ஒன்றிய அரசின் போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பராமரிப்புப்படி விகிதத்திற்கும், மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுவரும் பராமரிப்புப்படி விகிதத்திற்கும் இடையே பெரிய வேறுபாடு நிலவுவதாலும், மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுவரும் பராமரிப்புப்படி உயர்த்தப்பட்டு பத்து வருடங்களுக்கு மேல் கடந்து விட்டதாலும்,

மாணவர்களுக்கான புத்தக செலவினம் மற்றும் இதர பராமரிப்புச் செலவினங்கள் பெருமளவு உயர்ந்து காணப்படுவதாலும், ஒன்றிய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ், 2020-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுவரும் பராமரிப்புப்படி விகிதங்களிலேயே மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பராமரிப்புப்படியினை உயர்த்தி வழங்கும் பொருட்டு, 2020-2021 ஆம் ஆண்டில் பயன்பெற்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை அடிப்படையில் உத்தேசமாக 26024 மாணாக்கர்களுக்கு பராமரிப்புப்படி உயர்த்தி வழங்க ஆகும் செலவினம் ரூ.8.79 கோடியினை வழங்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கோரியுள்ளார்.

5. இந்நிலையில், மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களின் அறிவிப்பின்படி, மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பராமரிப்புப்படியினை ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்திற்கு இணையாக, கீழ்காணும் அட்டவணையில் கண்டுள்ளபடி, 2021-2022-ஆம் கல்வி ஆண்டு முதல் உயர்த்தி வழங்கும் பொருட்டு ரூ.8,79,00,000/- (ரூபாய் எட்டு கோடியே எழுபத்து ஒன்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்ட நெறிமுறைகளில் உள்ள பாடப்பிரிவுகள் | ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டம் பாராமரிப்புப்படி ஆண்டிற்கு (ரூபாயில்) | |
|---|---|---|
| | Day scholar | Hosteller |
| Group 1 : Degree and Post Graduate Level Professional Courses | 7000 | 13500 |
| Group 2 : Other Professional Courses Leading to Degree, Diploma, Certificate | 6500 | 9500 |
| Group 3 : Graduate and Post Graduate Courses not covered under Group-I & Group-II | 3000 | 6000 |
| Group 4 : Class XI and XII : ITI Courses, 3 year Diploma Courses in Polytechnics, etc., | 2500 | 4000 |

(Group-1 முதல் Group-4-இல் உள்ள பாடப்பிரிவுகளின் விவரங்கள் இணைப்பில் வைக்கப்பட்டுள்ளது)

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் 277 – கல்வி – I - மாநிலச் செலவினங்கள் – AV மெட்ரிக் படிப்பிற்கு மேல் படிக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு சிறப்பு படிப்பு உதவித் தொகை வழங்குவதற்கான திட்டம் – 312 – படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 02 மெட்ரிக் படிப்புக்கு மேல் படிப்பு.

(ததொகு 2225 01 277 AV 31202)"

7. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்.43374/ நிதி(ஆதி(ம)பந)துறை / 2021, நாள் 20.11.2021- இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, கல்லூரி சாலை, சென்னை-600 006.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை-600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-600 00 1/5
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்:-

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம் , சென்னை-600 009.
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009

நிதித் (ஆதி(ம)பந) துறை, சென்னை-600 009.

உயர் கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-600 009.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை-600 009.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்து பிரிவுகள்
சென்னை-600 009.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

14/12/2021.

பிரிவு அலுவலர்

14/12/2021

**இணைப்பு**

**அரசாணை (நிலை)எண்.107 / ஆதி(ம)பந(ஆதிந3)த்துறை,**

**நாள் : 14.12.2021**

| | |
|---|---|
| Group 1 | Degree and Post Graduate Level Professional Courses" shall mean : all professional courses in Medicine, Engineering, Technology, Planning, Architecture, Design, Fashion Technology, Agriculture, Veterinary & Allied Sciences, Management, Business Finance / Administration, Computer Science / Applications (ii) Post Graduate Diploma Courses in various branches of Management & Medicine (iii) C.A. / I.C.W.A. / C.S. /I.C.F.A., etc., (iv) M.Phil., Ph.D., and Post Doctorial Programmes (D.Lit., D.Sc. etc.,) of Group-I, Group-II and Group-III Courses. (V) L.L.B., Integrated L.L.B., L.L.M., |
| Group 2 | Other Professional Courses Leading to Degree, Diploma, Certificate" shall mean all professional courses leading to Degree, M.Ed., / M.Pharma, Diploma, Certificate in areas like Pharmacy (B.Pharma.), Nursing (B Nursing), BFS, other paramedical branches like rehabilitation, diagnostics etc., Mass Communication, Hotel Management & Catering, Travel / Tourism / Hospitality Management, Interior Decoration, Nutrition & Dietetics, Commercial Art, Financial Services (e.g. Banking, Insurance, Taxation etc.,) for which entrance qualifications in minimum Sr. Secondary (10 + 2) and Vocational Stream, ITI courses and Polytechnic where entrance qualification is Class XII or above |
| Group 3 | Graduate and Post Graduate Courses" shall mean : courses not covered under Group-1 & Group-2 e.g. B.A. / B.Sc., / B.Com. etc., M.A. /M.Sc.,/M.Com. etc., |
| Group 4 | All post – matriculation (Post Class X level) non degree courses" shall mean : All post-matriculation level non-degree courses for which entrance qualification is high school (Class X) e.g. Sr. Secondary Certificate (Class XI and XII) ; both general and vocational stream, ITI Courses, 3 year Diploma Courses in Polytechnics, etc., |

**க.மணிவாசன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

14/12/2021

**பிரிவு அலுவலர்**

14/12/2021